11th March 1964]

(*b*) when a final decision would be taken in the matter?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The matter is under correspondence with the Government of Mysore and a decision will be taken after their reply is reecived.

திரு. மா. இராசாங்கம் : மைசூர் மாநில சர்க்காரோடு நமது மாநில சர்க்கார் போக்குவரத்துத் துறை பேச்சுவார்த்தை நடத்துவதைப் போல், கேரள மாநில சர்க்காரோடு பேச்சு வார்த்தை நடத்தினர்களே, அது எந்த நிலையில் உள்ளது ? அந்தப் பேச்சுவார்த்தை முடிந்தால் சர்க்கார் பஸ்கள் பெரியகுளம் தாலூக்கா வழியாக மதுரைக்கு வர வழி செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முடிவு ஒன்றும் ஏற்படவில்லை. பேச்சுவார்த்தை நடத்தின மைசூரிலும் சரி, பேச்சு வார்த்தை நடத்தாத கேரளாவிலும் சரி, முடிவு ஏற்படவில்லை.

* 215 *Q.*—SRI A. K. SUBBIAH (on behalf of Sri M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the details of the new Inter-State bus routes to be run by the Madras State Transport to the Kerala State; and

(*b*) the present stage of negotiations with the Kerala Government?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The matter is under correspondence with the Government of Kerala; and a decision will be taken after their reply is received and considered.

* 216 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to open a new bus route by the State Transport Department from Madurai to Kottayam (via) Kambam, Kumuli, etc.; and

(*b*) if so, the present stage of the proposal?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) The matter is under correspondence with the State Transport Board, Trivandrum.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, மைசூர் அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்துவதாகச் சொல்லப்படுகிறது. மைசூர் லிமிட் 20 மைல்தான் இருக்கிறது. அதற்கு பர்மிட் கொடுப்பது நமக்கு லாபமாக இல்லை. ஏறக்குறைய பணம் பூராவாக மைசூர் அரசாங்கத்திற்குப் போகிறது. ஆகவே, நம்முடைய லிமிட் வரையில் அரசாங்க பஸ் விடக்கூடிய நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபடுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தக் கொள்கை அவ்வளவு சரி என்று நான் ஒத்துக்கொள்ளவில்லை. இப்பொழுது பெங்களூருக்குப் பஸ் விட்டால் நிறைய பிரயாணிகள் போவார்கள்.

[11th March 1964

ஹோசூர் எல்லே வரையில் ஒருவரும் பேசமாட்டார்கள். பெங்களூருக்குப் போகிறவர்கள் அதிகமாக இருப்பார்கள். ஆகவே பத்து மைல், இருபது மைல் என்று பார்க்காமல் ட்ராஃபிக் அதிகமாக எங்கு இருக்கிறதோ அம்மாதிரி பார்த்து பஸ் விடவேண்டும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : கோவையிலிருந்து உதகை வழியாக மைசூருக்கும் பெங்களூருக்கும் பஸ் விட அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ? அந்த பஸ் விடுவது பற்றி மைசூர் அரசாங்கத்துடன் கலந்து ஆலோசனை நடத்தப்படுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பல விஷயங்களை ஆலோசனை செய்து கொண்டிருக்கிறோம். தனித் தனியாக ஒவ்வொரு ரூட் பற்றியும் ஆலோசனையில் இருக்கிறதா என்று சொல்ல முடியாது, சொல்வதும் சரியல்ல, என்று நினைக்கிறேன். முடிவு ஏற்பட்ட பிறகு அது சம்பந்தமான எல்லா விவரங்களும் கொடுக்கிறோம்.

திரு. மா. இராசாங்கம் : மதுரையிலிருந்து கம்பம் வரை சர்க்கார் பஸ் விடாததற்கு ஒரே காரணம், தனியார் துறையிலே டி.வி.எஸ். இருக்கிறது என்பதுதான் என்று பேசப்படுகிறதே, அது உண்மையா ? அல்லது, மாற்று வழியில் அதற்கு வழிவகை செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எத்தனையோ விஷயங்கள் பேசப்படுகின்றன. எத்தனையோ விஷயங்கள் வேண்டுமென்றே பேசுகிறார்கள். அதையெல்லாம் வைத்துக் கேள்வி கேட்பது சரியாக இருக்காது.

120 மைலுக்குக் குறைந்து சர்க்கார் பஸ் விடுவதில்லை என்ற திட்டம் வைத்திருக்கிறோம். அந்தத் திட்டத்தின்படி எந்த இடங்களுக்குச் சரியாக நாம் விட முடியுமோ அதையெல்லாம் பரிசீலனை செய்து, நிதி வசதி எவ்வளவு இருக்கிறதோ அதைப் பார்த்து, 'ப்ரையாரிடி' எங்கே கொடுக்க வேண்டுமோ அதையும் யோசித்து பஸ்கள் விட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலிருந்து நீண்ட தொலைவு பஸ்களைக் கேரள மாநிலத்திற்கும் மைசூர் மாநிலத்திற்கும் அனுப்புவதற்கு முயற்சி எடுத்து இருப்பதைப் போலவே, அந்த மாநிலங்கள் இந்த மாநிலத்தோடு தொடர்பு கொள்ளும் அளவுக்கு முயற்சிகள் எடுத்திருக்கின்றனரா ? அது மாதிரி ஏதாவது கோரிக்கையை இந்த அரசாங்கத்திற்கு வைத்துள்ளனரா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர்களும் அத்தகைய முயற்சி எடுத்திருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. அவர்கள் இப்பொழுது சொல்லக்கூடிய ஒரு புகார் சென்னை ராஜ்ய பஸ்கள் அதிகமான மைல் தூரம் அங்கே வருவதோடு, அதிகமான எண்ணிக்கையிலும் கேரள, மைசூர் ராஜ்யங்களில் ஓடிக்கொண்

11th March 1964]

டிருக்கின்றன என்பது. அதற்குத் தகுந்த அளவில், Party இல் தங்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக் கிறார்கள்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்ட தலைநகர் ஆகும் நிலைமையில் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் 'சென்டர்' ஆக இருக்கிறது. அத்திப்பள்ளி பார்டர் வரை விட்டால் அங்கிருந்து மைசூர் ஸ்டேட் பஸ் இருக்கிறது. அங்கே மைசூர் கவர்ன்மெண்ட் ஒரு பர்மிட் கொடுப்பது என்றால் நமக்கு நஷ்டந்தான். ஆகவே, இதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதை எல்லாம் இலாகா பரிசிலித்துத்தான் ஏற்பாடு செய்யப்படுகிறது. நஷ்டமாக இருந்தால் அந்தக் காரியத்தைச் செய்யமாட்டோம்.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்த ஆண்டு புதிய ரூட்டுகளில் எத்தனை பஸ் விட அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்தக் கேள்வியில் இதற்குப் பதில் சொல்ல முடியாது. டிமாண்ட் வரும்போது இது பற்றிய விவரங்கள் தெரிவிக்கப்படும்.

திரு. அ. ராகவ ரெட்டி : சென்னையிலிருந்து திருப்பதிக்குத் தற்போது நான்கு வழிகளில் 9 பஸ்கள் விடப்படுகின்றன. இந்தப் பஸ்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தக் கேள்வி எல்லாம் இன்றைக்கே கேட்டு விட்டால் நாளை மறுநாள் வருகின்ற டிமாண் டில் பேசுவதற்கு இடம் இல்லாமல் போய்விடும். டிமாண்டில் பேசலாம்.

அரசாங்க பஸ்களால் விபத்துக்கள்

***217 கேள்வி.—திரு. எம். எஸ். மணி :**
திரு. கே. ஏ. மதியழகன் : } கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-63-ல் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்களால் ஏற்பட்ட விபத்துக்கள் எத்தனை ?

(இ) அவற்றைக் குறைக்க நிர்வாகத்தினர் எடுத்துக்கொண்ட தற்காப்பு நடவடிக்கை யாது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) 1962-63-ல் பெரிய விபத்துக்கள் 78, சிறிய விபத்துக்கள் 185, சாதாரண விபத்துக்கள் 804 ஏற்பட்டன.

(இ) ஜாக்கிரதையாக வண்டி ஓட்டுவதன் அவசியம்பற்றி பொதுவாக விதிகள் செய்திருப்பது தவிர, டிரைவர்களுக்கு அவ் வப்போது தேவைப்படும் உத்தரவுகளும் பிறப்பிக்கப்படுகின்றன.